ஸ்ரீ



ஸ்ரீமத் வரவரமுநயே நம:

சென்னை இந்துபிரீசிங்கோசைட்டி

கோவிந்தராஜு முதலியாரா லியற்றிய

# ஸ்ரீகிருஷ்ணலாலி.

காப்பு.

வஞ்சித்துறை.

திருசட கோபனங்
குருபாதம்வாழ்த்தியே
மருகிருஷ்ணலாலித்
தெருளுடனோதுவாம்.

ஸ்ரீகிருஷ்ணலாலி கேதாரம்.

சிங்காரப் பெண்கள்வாரீர் ஸ்ரீகிருஷ்ண
சீர்ம்மையிலாலிகூற

மங்களகரங்கள்வருமே-மாமவன்
மதுமுற்றிலகும்லாலி ௧

பச்சையுலகம்பமீது-கலைத்திட்ட
பவளபொதிகைபொருத்தி
இச்சையுடன்வச்சிரத்தா-செதுக்கிய
யேமதூண்களுமமர்த்தி ௨

சுயரூபமெனைக்காட்டினார்-மண்டபஞ்
சுந்தரப்பொன்னினாலே
நயனஞ்செறிமணிக்கோவையு-முத்தார
நன்னயவிதானமீதே ௩

நவமணித்தொட்டிலுக்கே-உயர்தங்க
நாணயக்கொலுசு மாட்டி
புவனத்தாரதிசயிக்க-விச்சித்ர
பூமாலையைசூட்டினார் ௪

தேவசமூகங்கள்கண்டு-இங்கர்
தேவேந்திரன்புரமிதென்ன
ஆவலுடனாரதரு-மிசைபாட
அமரருடனந்துவந்தார் ௫

சங்கீதஞ்சகிகள்பாட-கிருஷ்ணர்க்கு
சம்பங்கிதைலமிட்டே
மங்களஸ்நானமகிழ ஆட்டினார்
மங்கையர்களழகுபெறவே ௬

சொகுசுடகிருஷ்ணருக்கு-மாணிணிக
பேபொன்னுடைகட்டி
அகணிதமிருத்தமணிகள்-ஸ்தாபித்து
ஆரம்பூட்டலானார் ௭

புலிநகக்கொலுசுகளையே-கிருஷ்ணருக்கு
பூட்டியேயரிவைமார்கள்
நலிவிலாபாஜிபந்தை-புஜந்தனி
நலமுடன்காட்டினார்கள் ௮

தசநகெனுங்குண்டலத்தை-காதினில்
தரித்துதாமோதரர்க்கே
நிகரிகெனுமரைஞாணுடன் சதங்கையு
நேருடன்கட்டலானார் ௯

அங்குலியமாதரணையாய்-விரலதனி
லமையவேவரிசையாகச்
சிங்காரமாகசெய்தார்-ஸ்ரீகிருஷ்ணனை
சிலேநுதற்பாவைமாதர்கள் ௧௦

பீதங்கணைகொலுசுகள் கைகட்குப்
பேரொளிசெய்ததரித்து
பாதங்களிணங்களில் ரத்தினப்
பாடசத்தண்டைகொலுசும் ௧௧

குருவுள்ளபணிகள்பூடி-சிரசிற்கு
குப்பிசடைபின்னிமாட்டி

இருசமல்லிகைமுல்லையுஞ்-சம்பங்கி
இருவாட்சிபாரிஜாதம ௧௨

குருவேரதவனமருவு-மாராமுட
குழலதனிற்சூட்டி மிகவே
அரிச்சந்தனஞ்சிப்புனுகு-ஜவ்வாது
ஆமோதகற்பூரமும் ௧௩

உறமாகஸ்தூரியுங்-கலந்தமே
ஒப்புடன்கூட்டிபெண்கள்
அரியரகந்தன்னிலுங்-கண்டத்தி
லரிக்கையாய்ப்பூசினர் ௧௪

முத்துகிருஷ்ணன்வனக்கைநெற்றியின்
மோககஸ்தூரிதிலர்தம்
சித்தினிகள்வெத்துயாலஞ்-சேர்ப்பித்து
திருஷ்டிகழிபொட்டுவைத்தார் ௧௫

பேரிமத்தளங்கங்கமுங்-தாளமொடு
பேரொலியெக்காளபடகம்
வாரிபோற்குமுறசெய்தே-நாகசுர
வாத்தியமுழக்கினார்கள் ௧௬

ரம்பையூர்வசிமேனகைதிலோத்தமை
ரமணீயநடனமாட
தம்புருவுநாரதர்களே யாழிசெலமு
சிரசுதிகளோடுபாடு ௧௭

பக்தஜனமொருலட்சமும்-வேதாந்த
பார்ப்பார்களொருலட்சமுஞ்
சுந்தரிக்கொருலக்ஷமும்-பிராமண
சுமங்கலிக்கொருலக்ஷமும் ௧௮
அந்தமாசபையைநோக்கி பூமழைக
ளமரமாதவாகள் பொழிய
வந்தியர்க்கவிபல்புகழ்-கிருஷ்ணரிட
வைபவம்பாருமீர்காள் ௧௯
நவமோகனுக்கனுக்கே-கோபிகைகள்
நாகரீகஞ்செய்து
புவனிதனிலேயுள்ளவர் துதிசெய்யும்
புருஷோத்தமனை வேண்டினார் ௨0
பவரோகவயித்தியனம்மா- இக்கிருஷ்ணன்
பக்தரைக்காப்பனம்மா
கமலநாபனைதொட்டிலில் வைத்தனர்
சஞ்சைசமுகவனிதைமார்கள் ௨௧
வாலிமங்களமிசைத்தார் கோபிகா
லாவண்ணிய பெண்கள்கூடி
பாலன்றொட்டிலிருக்க பத்தியுடன்
பலவிதங்கூறினரே ௨௨
வாலிவைகுந்தவாசரி ஸ்ரீஹரி
மக்ஷ்மியனேவுல்லாசா
வாலிபன்னகசயனே-நந்தசுத
வாலிஸ்ரீபரம்புருஷ ௨௩

வாலிமச்சாவதாரா-ஸ்ரீகிருஷ்ண
வாலிகூர்மவதாரா
வாலிவராஹவதாரா-பவதுரித
வாலிஸிம்மஹாவதாரா ௨௪
வாலிகுறலாவதார கோவிந்த
வாலிபரசுராமனே
வாலிராமாவதாரா-பலராம
வாலிகிருஷ்ணாவதாரா ௨௫
வாலிகிருஷ்ணாவதாரா-ருஷிகேச
வாலிகற்கியாவதாரா
வாலிசகவிரூபனே-மரபவனி
ரட்சித்தசத்வகுணனே ௨௬
தேவகிவசுதேவரின்-புத்திரா
திவ்யமங்களமூர்த்தியே
தேவாதிதேவர்செய்யுக் துதிபெற்ற
தேவனே திக்குநீயே ௨௭
காவலாககருணாநிதி-ஸ்ரீகிருஷ்ண
கலியாணகுணஸ்ரீபதி
பாவமறவருள்செய்யுவா-முராஹரி
பவபத்ரவநுவாசே ௨௮
நந்தகோபன்சோதையின்-புத்ரனாய்
நல்விருளிலேயடைந்தே
சந்ததம்பசுநிரைகளைபாலித்து
தயிர்தளவிலுண்டபெரியோய் ௨௯

நந்தகோபன்மனையிலே-திருமாது
நடனங்கள்புரியகண்டு
இந்துமுகசோதைதன்பாலனை .
யீந்திடம்மகிழ்ந்தமல்தாய் ௧௦
என்னநோன்புநூற்றலோ-பூர்வத்தி
வியாத்தபஞ்செய்தாளோ
என்னபுண்ணியஞ்செய்தாளோ-அசோதைதா
னென்னதாமஞ்செய்தாளோ ௧௧
சாயயசரூபனுடைய-நிதிகட்கு
சரியாதபுகழ்வதம்மா
சோமரவிபிரமனரனுந் தேவர்களுந்
துதிசெய்யவேவிறந்தான் ௧௨
வேதவேதியருக்கெல்லாம்-கோதானம்
வேணலட்சங்கொடுத்தே
வாதனங்கனகஜீத-வஸ்திரம்
வரையாதுதான்கொடுத்தார் ௧௩
கந்தபுஷ்பாதிகளையே அனைவதற்குங்
கனயாகவேபதிர்ந்து
நந்தநந்தனைக்கண்டு-அசோதைதா
நந்தனுமுளங்களித்தார் ௧௪
க்ஷீராப்திசயனனாக கிருஷ்ணனிட
லீலச்சரித்ரமதையே
கோதிடயகூறினோருங்கேட்போருங்
குவைவினிதிபெற்றுவாழ்வார் ௧௫

தாயுதாதிசையேகுமே-சதபுத்ர
தனதானியம்பெருகுமே-சொல்லடி
ஈநிலாச்சக்திவருமே-சொல்லிடி
விகபரசௌக்கியந்தருமே ௩௬
கோயமரநகரில்வளரும்-புஜபல
கோத்திறந்தனிற்பிறந்த
டாயஞ்சின்னரௌத-ஆந்திரப்
பாஷையிற்பாடியதையே ௩௭
ஸ்ரீவிசிஷ்டாத்துவைத-சித்தாந்த
சென்னைப்ரபோதசங்கம்
நேயமாயதிலொருவனும்-வைணவரி
னிமளதாடபேரியணியும் ௩௮
சமச்சிவாயன்தமிழால்பாடுங்
கோபாலலாலிதன்னை
பூவிலுள்ளோர்களன்பாய்-சொல்லிடில்
புகழ்பெற்றுவாழ்வர்மாதோ ௩௯
லாலிலாலேபலாலி-ஸ்ரீகிருஷ்ண
லாலிலாலேயலாலி
பாலசகிமார்கள்லாலி-கோவிந்த
பாதயுகமங்கள்-லாலி ௪0

ஸ்ரீகிருஷ்ணலாலி

முற்றிற்று.